**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC.NO. 53/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–7 |
| Name | : | அருண்கிருஷ்ணா, வயது 38 |
| Father Name/Husband Name | : | பழனியாண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th day of August 2024.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் 22.08.2022 ஆம் தேதி பணியில் இருந்த போது, நாலாட்டின் புதூர் காவல் நிலைய ஆய்வாளர் காவலர் விபின் குமார் என்பவர் மூலம் கொடுத்த வேண்டுகோளைப் பெற்று, மேற்படி காவல் நிலைய குற்ற எண்.181/2022 வழக்கில் சம்பந்தப்பட்ட ராஜேந்திரன் என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்ய 11.15 மணிக்கு பெற்றுக் கொண்டேன்.
2. அவர் மிதமான சத்தூட்டம் கொண்ட 50 வயது மதிக்கத்தக்க ஆண்பிரேதம். அவரது இரண்டு கைகளும், கால்களும் விறைத்த நிலையில் காணப்பட்டன. கை விரல்கள் நீல நிறத்துடன் காணப்பட்டன. இரண்டு கண்களும் மூடி இருந்தன. நாக்கு வாயிற்குள் இருந்தது. பல் வரிசை வலது மேல் 8 கீழ் 8 மற்றும் இடது மேல் 8 கீழ் 8 இருந்தன.
3. அவரை பரிசோதித்த போது 7x3x1 cm அளவில் சிதைந்த காயமும் தலையின் நடுப்பகுதியில் (Interparittial suture line) இருந்தது. உராய்வுக் காயங்கள் இடது தோள்பட்டையில் 4x2 cm அளவிலும், உராய்வுக் காயம் 1x1cm அளவில் வலது கால் முட்டியிலும், உராய்வுக் காயம் 4x1 cm அளவில் இடது கால் முட்டியிலும், உராய்வுக் காயம் வலது தோள்பட்டையில் 7x4 cm அளவிலும் காணப்பட்டது.
4. உள்காயங்கள் தலையில் ரத்தக்கட்டு 50 முதல் 80 மிலி அளவு கபால எலும்பிற்கு வெளியே இருந்தது. மண்டை ஓட்டிற்குள் 80 மிலி முதல் 100 மிலி அளவில் உறைந்து காணப்பட்டது. சிறுமூளை அருகில் சுமார் 50 மிலி ரத்தம் உறைந்து காணப்பட்டது. வயிற்றில் உணவு எதுவும் இல்லை. மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட தலைக் காயம் மற்றும் அதன்

விளைவினால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்துரை வழங்கி சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை சான்றுகள் நான் வழங்கியது தான். **அது முறையே அசா.ஆ.5 மற்றும் அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. அசா.ஆ.5 ஆவணம் என்றைக்கு வழங்கினீர்கள் என்றால் 22.08.2022. அசா.ஆ.5 ஆவணத்தில் இறந்து போனவரின் இறப்பிற்கான காரணம் என்ன சொல்லியுள்ளீர்கள் என்றால் காரணம் எதுவும் சொல்லவில்லை. அசா.ஆ.5 ஆவணம் வழங்கிய பின்னர் காவல் ஆய்வாளர் எப்போது விசாரித்தார் என்றால் ஞாபகம் இல்லை.
2. இறந்து போன நபருக்கு தலையில் காணப்பட்ட சிதைந்த காயம் வாகன விபத்தில் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு. ரசாயன பரிசோதனை அறிக்கை எப்போது பெறப்பட்டது என்றால் 29.12.2022. 08.03.2024 க்கு பின்னர் ஆய்வாளர் உங்களை விசாரித்தாரா என்றால் இல்லை. தலைக்காயத்தை தவிர்த்து மற்ற காயங்கள் சிராய்ப்புக் காயங்கள் என்றால் சரிதான்.
3. ரசாயன பரிசோதனை அறிக்கை வந்த பின்னர் அதனை பரிசீலித்து நீங்கள் இரண்டாவது அறிக்கை எதுவும் கொடுத்தீர்களா என்றால் 08.03.2024 அன்று கொடுத்தேன். தலையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில் ரசாயன பரிசோதனைக்கு எதனால் அனுப்பினீர்களா என்றால் இறப்பிற்கு வேறு காரணம் உண்டா என்று அறிய அனுப்பினேன்.
4. இறந்து போன நபருக்கு தலையில் ஏற்பட்ட காயம் வாகன விபத்தால் ஏற்படவில்லை என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நீங்கள் பரிசோதனை அறிக்கை வழங்கியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ரசாயன பரிசோதனை அறிக்கை வழங்கிய நபரை விசாரித்தால் தான் ரசாயன பரிசோதனை அறிக்கையின் தன்மை தெரியும் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.